ECOURT COPY

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC.No.82/2020** |
| Deposition of PW1 | Prosecution<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : திருமதி. சுமதி |
| Father's Name/Husband Name | : க/பெ. வீரபத்திரன் |
| Village | : பூனையானூர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW1 |
| Religion | : இந்து |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **6th** Day of **April 2022.**

திருமதி. சுமதி

**முதல் விசாரணை**

நான் தற்போது பூனையானூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை

தெரியும். அவர் என்னுடைய கொழுந்தனார். 17.01.2019 அன்று மதியம் 1.00 மணியளவில் பூனையானூரில் உள்ள எங்களது வீட்டின் அருகில் என் கொழுந்தனார் மதன் மற்றும் அவரது மனைவி ஆர்த்தி ஆகிய இருவரும் எனது மாமனாரை பார்த்து கொள்வதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக தகராறு செய்தார்கள். எதிரி மதன் என்பவரும் அவரது மனைவி ஆர்த்தி என்பவரும் எனது வீட்டின் வாசலில் வைத்து கண்டாலொலி , தேவிடியா என்று என்னை திட்டினார்கள். அந்த வார்த்தைகளை கேட்டாலே எனக்கு உடம்பு கூசுகிறது. பேசிக்கொண்டிருக்கும் போது எதிரி மதன் அருகில் இருந்த கட்டையை எடுத்து எனது கணவரின் வலது கண்ணின் பகுதியில் அடித்து விட்டார். அடித்ததில் என் கணவர் கீழே விழுந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் கட்டை தான் அது. அது அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் மனைவி ஆர்த்தி என் கணவரின் நெஞ்சின் மீது குதித்து சாவு டா என்று சொல்லியும் என்னிடம் உன்னை அனாதை ஆக்காமல் விடமாட்டேன் என்று சொல்லியும் அடித்தார்கள். இதை நான் தடுக்கக சென்ற போது எதிரி மதன் கட்டையால் என் கை மீது அடித்ததில் வலது முழங்கையிலும், காயம் ஏற்பட்டது. ஆர்த்தி எனது முடியை பிடித்து கீழே தள்ளி கையால் அடித்தார். சேலையை கிழிந்து விட்டார். உன்னையும் தான்டி கொல்வேன் என்று சொன்னார்கள். எனது கணவருக்கு காயம் ஏற்பட்டு ரத்தத்தை பார்த்ததும் எனக்கு மயக்கம் வந்து விட்டது. எனது மாமனார் ஜீவரத்தினம் மற்றும் நாதனார் ஆனந்தி ஆகியோர் வந்து தடுத்தனர். சம்பவ இடத்தில் சுமார் 50, 60 நபர்கள் கூடிவிட்டார்கள். என் கணவரை பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில்

E COURT COPY

சேர்த்துவிட்டு நான் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை தெரிவித்தேன். அவர்கள் எனக்கு காயம் இருந்ததால் மருத்துவமனையில் போய் சிகிச்சை எடுத்துக்கொள்ள சொன்னார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக நானும், எனது கணவரும் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். நான் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி (மு.கூ.பொ).**

E-COURT COPY

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC.No.82/2020** |
| Deposition of PW2 | Prosecution<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : திரு. வீரபத்திரன் |
| Father's Name/Husband Name | : த/பெ. ஜீவரத்தினம் |
| Village | : பூனையானூர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW2 |
| Religion | : இந்து |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **6th** Day of **April 2022.**

திரு. வீரபத்திரன்

**முதல் விசாரணை**

நான் தற்போது பூனையானூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை

ECOURT COPY

E-COURT COPY

தெரியும். அவர் என்னுடைய தம்பி. கடந்த 17.01.2019 அன்று மதியம் 12.00 மணிக்கு எங்கள் வீட்டின் முன்பு வாசலில் என் அப்பாவை பாரமரிப்பது தொடர்பாக எனக்கும், என் தம்பிக்கும் பிரச்சனை ஏற்பட்டது. ஆஜர் எதிரி உங்கம்மாவ ஓக்க, உங்க ஆயாவ ஓக்க, கண்டாஓலி, தேவடியா பையா, என்று என்னை திட்டினார். பேசிக்கொண்டிருக்கும் போது எனது தாத்தா சின்னசாமி வந்து அவன் குடித்து இருக்கிறான். அவனிடம் பேசாதே என்று என்னிடம் தெரிவித்தார். என்னடா பேசற என்று சொல்லிவிட்டு நான் வெளியே வந்தேன். அப்பொழுது எனது தம்பி ஓங்கி என் வலது கண்மீது கையால் குத்திவிட்டார். மணிகண்டன், ஆனந்தி, ஜீவரத்தினம் ஆகியோர் என்னை பாதுகாக்க வந்து தடுத்து பிடித்துக்கொண்டார்கள். ஆனாலும், மறுபடியும் 4 முறை என் வலது கண்ணில் குத்திவிட்டார். குத்தியதில் எனக்கு தலை கிறுகிறுத்து விட்டது. நான் திரும்ப அடிக்க கை ஓங்கும் பொழுது என் தம்பி மனைவி ஆர்த்தி என்னை சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததும் என்னை மூத்தார் என்றும் பாராமல் ஆர்த்தி என் நெஞ்சின் மீது மிதித்துவிட்டார். அந்த சமயத்தில் மீண்டும் எனது தம்பி ரீப்பர் கட்டையை எடுத்து வந்து என் வலது கண் பகுதியில் அடித்துவிட்டார். அதில் எனக்கு வலது கண் பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. அதே ரீப்பர் கட்டையில் என்னை அடிக்கும்போது என் மனைவி தடுக்க வந்து அவருக்கு கையில் காயம் ஏற்பட்டது. நாங்கள் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். பிறகு மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். அதன்பிறகு மருத்துவர் பரிந்துறையின்படி சென்னை எழும்பூரில் உள்ள அரசு கண்

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கட்டையால் தான் அடித்தார்கள் என்று சரியாக தெரியவில்லை. ஆனால் இதுபோன்ற கட்டையால் தான் அடித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி (மு.கூ.பொ).**

ECOURT COPY

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC.No.82/2020** |
| Deposition of PW3 | Prosecution<br>Defence<br>Court |
| Name | : திரு. ஜீவரத்தினம் |
| Father's Name/Husband Name | : த/பெ. முத் து |
| Village | : பூனையானூர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW3 |
| Religion | : இந்து |
| Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **6th** Day of **April 2022.**

திரு. ஜீவரத்தினம்

**முதல் விசாரணை**

நான் தற்போது பூனையானூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது

ECOURT COPY

இளைய மகன். அ.சா.1 சுமதி எனது மருமகள். அ.சா.2 வீரபத்திரன் எனது மூத்த மகன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மதியம் 1.00 மணிக்கு என் இளைய மகன் மதன் வீட்டின் முன்பகுதியில் என்னை பார்த்து கொள்வது சம்மந்தமாக எனது இரு மகன்களும் தகராறு செய்துகொண்டார்கள். அந்த பிரச்சனையில் எனது மூத்த மகன் வீரபத்திரன் ரீப்பர் தடியால் என் இளைய மகன் மதனை அடித்தார். அந்த தடியை பிடுங்கி திருப்பி என் இளைய மகன் மதன் வீரபத்திரனை அடித்துவிட்டார். அடித்ததில் வீரபத்திரனுக்கு வலது கண் பகுதியில் ரத்தகாயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் மகன் வீரபத்திரனை பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

அந்த பிரச்சனையில் எதிரி மதனுக்கும் அடிப்பட்டது. மதனுக்கு உள்காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. ஆனால் அவரே பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார். அந்த இடத்தில் வேறு எந்த நபருக்கும் காயம் ஏற்படவில்லை. என்னை பார்த்து கொள்வது சம்மந்தமாக தான் பிரச்சனை ஏற்பட்டது. அதன் பிறகு 1 வருடம் கழித்துதான் பிரச்சனை ஏற்பட்டது. வீரபத்திரன் தான் வீடு கட்டினார். எதிரி மதனும் வேலை செய்தான். அச்சமயத்தில் யார் யார் என்ன பேசிக்கொண்டார்கள் என எனக்கு

E-COURT COPY

ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். சம்பவ இடத்தில் மூத்த மகன் மற்றும் அவரது மனைவி மற்றும் இளைய மகன் மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் இருந்தார்கள். இளைய மகள் ஆனந்தி பிரச்சனைக்கு பின்னர் தான் அங்கு வந்தார். என் வீட்டிற்கு பக்கத்தில் தான் குடியிருக்கிறார். இரண்டு பேரும் ஒற்றுமையாக போனால் எனக்கு போதும். எதிரி மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரியின் தரப்பில் வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி(மு.கூ.பொ).**

ECOURT COPY